பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 17 சனிக்கிழமை (01 - 01 - 2000) VALAMPURI ஒலி: 13

01 JAN 2000

# 4650 ஆசிரியர்கள் புதிதாக நியமனம்

# கல்வி அமைச்சு அனுமதி வழங்கியது

## கல்வி அமைச்சின் செயலர் தகவல்

(திருமலை)

**வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் இது வரை காலமும் நிலவிவந்த தமிழ்பேசும் ஆசிரியர்களின் பற்றாக் குறையை புத்தாயிரம் ஆண்டுடன் நிவர்த்தி செய்யவும். புத்தாண்டுப் பரிசாகவும் 4650 ஆசிரியர்களை புதிதாக சேர்த்துக் கொள்வதற்கு கல்வி அமைச்சு அனுமதி அளித்துள்ளது.**

இதன் மூலம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கி கல்வித் தரத்தை மேலும் உயர்த்த முடியும்.

இவ்வாறு, வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா "வலம்புரி"க்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் கூறியுள்ளார்,

இப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் தமிழ்பேசும் ஆசிரியர்களுக்கு நிலவும் பற்றாக் குறையை நீக்கும் பொருட்டு 4650 ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு நிதிச்சேவை ஆணைக்

[6 ம் பக்கம் பார்க்க]

### புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

மலரும் புத்தாண்டில் அமைதியும்,
சமாதானமும் நிலவ இறையருள் வேண்டி
எம்இனிய வாசகப் பெருமக்கள்
விளம்பரதாரர்கள்,
அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
" வலம்புரி "
தனது புத்தாயிரம் ஆண்டு நல்வாழ்த்துக்
களைத் தெரிவித்துக்கொள்கிறது.

- நிர்வாகம்

## க.பொ.த [உயர்தர] புள்ளி அடிப்படையில் 1500 பேருக்கு ஆசிரியநியமனம்

(திருமலை)

க. பொ. த உயர்தரத்தில் சித்திபெற்று அடிப்படைப் புள்ளி 180க்கு மேல் பெற்றவர்களுக்கான ஆசிரிய நியமனத்தில் முதற்கட்டமாக 1500 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

இவ்வாசிரிய நியமனத்துக்கு சுமார் 30 ஆயிரம் பேர்வரை விண்ணப்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

1500 பேர் அடங்கிய பட்டியல் ஒன்றைக் கல்விச்சேவைகள் ஆணைக்குழு வடக்கு-கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தகுதி அடிப்படையில் (எந்தெந்தத் துறைக்கு விண்ணப்பித்துள்ளார்களோ அந்தத்துறைக்குரிய பாடங்களில் சித்திபெற்று பெற்ற புள்ளிகளின் அடிப்படையில்) அந்தந்தத் துறைக்கு பட்டியலில் இருந்து

(6 ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் 232 தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம் பெறுவர்

(வவுனியா)

வவுனியா வடக்கு கல்வி வயலபகுதியில் கடமை புரியும் 232 தொண்டர் ஆசிரியர்களும் தமது பதவியில் நிரந்தர மாக்கப்படுவர் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி. பி. அமைப்பின் பொதுச் செயளாருமான டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் தாம் ஜனாதிபதி சந்திரிக்காவுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடாத்தி இந்த தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நிஜமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

### வடக்கு - கிழக்கு

## அரச ஊழியர் இடமாற்றங்கள் மூன்று மாதத்திற்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் எழுதுவினைஞர்கள் ஏனைய தர ஊழியர்கள் சிற்றூழியர்கள் ஆகியோருக்கான வருடாந்த இடமாற்றங்கள் மூன்று மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மேற்படி அமைச்சு தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட அமைச்சு மேலும் தெரிவிக்கையில்; பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட திணைக்களங்களுக்கு இடையிலான இடமாற்றங்கள் நாளை முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்றும். தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாவட்டத்திலிருந்து வேறு ஒரு மாவட்டத்திற்கு அல்லது ஒரே பிரதேச செயலர் பிரிவில் இருந்து மற்றொரு பிரதேச செயலர் பிரிவிற்கான இடமாற்றங்கள் மாத்திரமே மூன்று மாதங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 4 ஆவது தமிழாராய்ச்சி மகாநாட்டு

## நினைவுத் தூபி அமைந்த பகுதி புனித பிரதேசமாக்கப்பட வேண்டும்

### யாழ். மாநகரசபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தவர்களின் நினைவாக யாழ். முற்றவெளியில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவு தூபி அமைந்துள்ள பிரதேசம் புனித பிரதேசமாக பரமரிக்கப்பட வேண்டும்.

உதவி மேயர் ரவிராஜ் தலைமையில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற யாழ் மாநகரசபையின் மாதாந்த கூட்டத்தில் 'புளொட்' உறுப்பினரால் கொண்டுவரப்பட்ட மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

அங்கு மேற்கொள்ளப் பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:- கலை, கலாச்சார மேம்பாட்டிற்காகவும், உள்ளூர் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் மாதம் தோறும் பௌர்ணமி கலை விழா நடத்தப்பட வேண்டும் என்றும் டாக்டர் சுப்பிரமணியம் பூங்கா புனரமைக்கப் பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

இதற்கமைய எதிர்வரும் பௌர்ணமிதினத்தன்று ஆரம்பிக்கும் கலைவிழா ஒவ்வொரு மாதமும் நடைபெறும் என்

[6 ம் பக்கம் பார்க்க]

## இன்று ஊரடங்கு இல்லை

(யாழ்ப்பாணம்)

புத்தாண்டு தினத்தை ஒட்டி இன்று யாழ் குடாநாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டுள்ளதாக யாழ்.சிவில் நிர்வாகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது. ]க]

## சடலம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கடல் நீரேரிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படும் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று நண்பகல் பளைப் பொலிஸாரினால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுளளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காகவும், மரணவிசாரணைக்காகவும், யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (58வ)

## புத்தாயிரம் ஆண்டில் சமாதானத்திற்கு கையொப்பம் பெறும் இயக்கம் ஆரம்பம்!

இலங்கையில் தற்போது பிடித்திருக்கும் யுத்த கலாச்சாரத்தை ஒழித்து சமாதான கலாசாரத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஒரு கோடி கையொப்பங்கள் வாங்கும் இயக்கமொன்று புத்தாயிரமாம் ஆண்டு 2ம் திகதி கண்டியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கையெழுத்து இயக்கத்தை சமாதானத்துக்கும், ஜனநாயகத்துக்குமானமக்கள் கூட்டணி முன்னின்று நடாத்தவுள்ளது.

இவ்வறிக்கைகள் 2000ஆம் ஆண்டு செப்டம்பரில் இடம் பெறவிருக்கும் ஐ.நா. பொது சபைக் கூட்டத்தின்போது சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

## யாழ்ப்பாணத்தில் நேற்று அமைதி தென்மராட்சியில் 'கிபீர்' குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியின் கரையோரப் பகுதியில் நேற்று கிபீர் விமானம் குண்டுகளை வீசியதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று யாழ்ப்பாணத்தில் குண்டுச் சத்தங்கள் சற்று தணிந்திருந்ததாகச் செய்திகள்தெரிவிக்கின்றன இதேவேளையில் ஆனையிறவுப்பகுதியில் ஷெல் சத்தங்களும், துப்பக்கிச் சூட்டுச் சத்தங்களும் இடம் பெற்றதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000 ஆம் ஆண்டில் காலடி வைக்கும்
இவ்வேளையில்
வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

**வெங்கடேஸ்வரா**

79, கஸ்த்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(00031)

எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்,
நலன் விரும்பிகள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

**போட்டோ ரவி அன் வீடியோ**

நவீன மிக்சிங் முறையில்
கலர் படப்பிடிப்புக்கும்
வீடியோ படப்பிடிப்புக்கும்
நாடவேண்டிய ஒரே இடம்
20, யாழ்றோட், யாழ்ப்பாணம்.
கிளை: அல்லப்பிட்டி 3
(00035)

அன்பர்கள் ஆதரவாளர்கள்
வாடிக்கையாளர்களுக்கு
எமது மனமார்ந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்

**கல்யாணி கிறீம் கவுஸ்**

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(00029)

புத்தாயிரம் ஆண்டில் காலடி எடுத்து
வைக்கும் இனிய வேளையில் எமது
வாடிக்கையாளர்கள் அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவர்க்கும் எம் இனிய வாழ்த்துக்கள்

**கஜமுகா ரேட் சென்ரர்**

281, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(00030)

புத்தாயிரம் ஆண்டை வரவேற்கும் இனியவேளை
சமாதான ஒளிபிறந்திட இறைவனை பிரார்த்தித்து
எமது வாடிக்கையாளர்கள் அன்பர்கள்
அனைவருக்கும் எமது உளமார்ந்த
வாழ்த்துக்கள்

**சிற்றி காட்வெயர்ஸ்**

55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(00039)

புத்தாயிரம் ஆண்டில் காலடி வைக்கும்
இனிய வேளையில்
வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள்
அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்.

**நதியா பான்சி**

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(00032)

புத்தாயிரம் ஆண்டு பிறக்கும்
இவ் இனிய வேளையில்
அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்

**உஷா ஏஜென்சி**

145, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(00040)

புத்தாயிரம் ஆண்டு புலரும்
இவ்வேளையில்
வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

**தரன் றேடர்ஸ்**

130, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(00038)

## (இராசி பலன்)

01-01.2000 சனிக்கிழமை
(தமிழுக்கு மார்கழி 17)

தசமி மாலை 3.21 வரை: சுவாதி இரவு 10.28 வரை இராகு காலம் பகல் 9.59 முதல் 11.25 வரை: சுப நேரம் மாலை4.01 முதல் 5.31 வரை அமிர்த சித்தயோகம்

மேடம்: எதிர்பாராதசெல்வாக்கு, நண்பர் உதவி பயணம்
இடபம்: தொழில் அனுகூலம், பணவரவு, நன்மதிப்பு
மிதுனம்: அன்னியதேசம், கண்டனாம், அலைச்சல்
கடகம்: புறம்போக்கு, பகை, மனச்சுமை
சிங்கம்: விடா முயற்சி, புதியஸ்தானம், காரிய சித்தி
கன்னி: நேயமிகுதி, குடும்பக்கவலை, யோசனை
துலாம்: துயரமானசெய்தி கடும்கோபம், உடல் உபாதை
விருச்சிகம்: முதன்மைத் நிலை, அதிகாரிகள் உதவி, தியாக சிந்தை
தனுசு: தடுமாற்றம், எதிரிகள் பயம், வெறுப்பு
மகரம்: பெரியோர் கரிசனை, விகடம், புத்திரர் பெருமை
கும்பம்: குழப்பமடைதல், செல்வந்தர் கோபம்' அகால உணவு
மீனம்: சத்துருதொல்லை, கடன்சுமை, தொழில் கேடு

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது.)

\- அனுஷியா

## 'மௌனத்துயில்' கவிதை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

'மௌனத் துயில்' கவிதை நூல் வெளியீட்டுவிழா இன்று காலை9. 00 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாச்சார மண்டபத்தில் இடம் பெறும்.

யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கி. விசாகரூபன் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் திருமதி மங்கையர்க்கரசிதிருச்சிற்றம்பலம் வாழ்த்துரை வழங்குவார்.

நல்லை ஆதீன ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்யசுவாமிகள் மற்றும் சிவ.சண்முகவடிவேல் ஆகியோர் அருளாசி வழங்குவர்.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு. கந்தையாவின் ஆசி உரையைத் தொடர்ந்து கவிஞர் சோ. பத்மநாதன் அறிமுக உரையையும் நிகழ்த்துவார்.

கவிஞர் கு. முருகையனின் வெளியீட்டுரையை தொடர்ந்து புலவர் வே. குமாரசுவாமி சிறப்புரை நிகழ்த்துவார்.

யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், வலிகாமம் பிரிவு உதவி கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தர் உட்பட பலர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

நூலாசிரியர் கு. றஜீபன் ஏற்புரை நிகழ்த்துவார் செல்வன் சி. செந்தூரன் நன்றியுரை நிகழ்த்துவார்.

## இன்று சங்காபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் சத்திரம் ஞானவைரவர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 7-00மணிக்கு 108 கலச சங்கு பூசை இடம்பெறுவதுடன் விசேட ஆராதனைகளும் இடம்பெற உள்ளன. (க)

## வண்டமிழ் போல் வாழ்க இனும் பன்நூற்றாண்டே

மிலேனியத் தாண்டுவந்து மிளிரும் வேளை
மிக்குயர்ந்த நடுநிலமை நேர்மை யோடு
கிலேசங்கள் கொண்டெந்தப் பக்கச் சார்பும்
கிஞ்சித்தும் இல்லாதஞ் சாமை சேர
இலேரென்பார்க் குதவிசெயும் இன்னோக் கத்தை
இதயத்திற் தேக்கிவைத்து எங்க ளுக்காய்
உலாவருகின் றெழுந்துள்ள வலம்பு ரியே
ஒண் தமிழ்போல் வாழ்கஇனும் பன்நூ றாண்டே

சொல்லவரும் நல்லுலகச் செய்தி எல்லாம்
சுடச்சுடவே ஒரிதளிற் தொகுத்துச் சொல்ல
வல்லதொரு நாளிதழாய் வையகந் தோன்றி
வருநட்பும் நடந்ததுவும் வகுத்துக் காட்டி
நல்லதொரு விடிவிற்கொலி நாதச் சங்காய்
நடுநிலையில் இயன்றவரை நாட்டங் காட்டி
இல்லதொரு இதளிதனைப் போல என்றே
எல்லரும் போற்றிடஇன் தமிழ்போல் வாழி

நிலம்புரி கின்றபல நிகழ்ச்சி யெல்லாம்
நிதம்திரட்டி உதயத்தெம் கையிற் சேர்த்து
நலம்புரி நினைவுதனை நாளும் நாடி
நங்கல்வி கலையோங்க, நறுந்த மிழர்க்
குலம்புரி மகத்தான கோட்பாட் டோடு
குவலயத்திற் தொழும்புசெயக் குறித்து வந்த
வலம்புரி இதளேநல் வலம்நீ வந்தே
வண்டமிழ்போல் வாழ்கஇனும் பன்நூ றாண்டே

நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்

## போகின்ற ஆயிரமும் வருகின்ற ஆயிரமும்

போயொழிந்த ஆயிரத்தில் போரும் அழிவுகளுமாய்
உலகம் கூறுண்டு அவலப் படக்கண்டோம்
ஆனாலும் நாங்கள் அடியோடு நம்பிக்கை

போனவராய் வீழ்ந்து தவித்துப் புலம்பவில்லை!
மானுடம் இங்கோர் மகாத்மா விடம்கண்டோம்
மேதா விலாசம் ஐன்ஸ்ரைனிடம் வியந்தோம்

இல்லார் பலராய் இருக்கும் நிலைமாற்றி
வல்லார் உழைப்போர் கைக்இந்த வையகத்தை
மாற்றும் வகை சூழ்ந்த மாக்ஸ்போல் ஒரு மனிதன்

மீட்டும் வரலாகும்; மேதாவிகள் வரலாம்!
காந்தியைப்போல் இன்று மொரு காவியத்தைக் கைகளிலே
ஏந்தி உலகம் இறும்பூ தடைந்திடலாம்!

புத்தாயிரத்தின் புகழ்பாடிக் கும்பங்கள்
வைத்து வரவேற்போம் வையம் பயனுறவே!
ஐயுறவும் ஏமாற்றும் ஆதிக்கக் கோவோச்சும்

பொய்யுறவா இந்தப் புவியை நடத்துவது?
வேட்டொலிகள் இன்றி விடியும் பொழுதுக்கு இந்
நாட்டுமக்கள் எத்தனை நாள்காத்திருப்பதுவாம்?

புத்தாயிரத்தில் புகும்வேளை நாம் வாழ்ந்தோம்
மெத்த மகிழ்ச்சி; புளகாங்கிதம்; வியப்பு! இது
அன்பாயிரமாய் அமையப் பெறுவோமேல்
இன்பமே சூழும் எமக்கு!

\- கவிஞர் சோ. பத்மநாதன்

இனிய புத்தாண்டு பிறக்கும்
இவ்வேளையில் நாட்டில் சமாதானம்
உண்டாக பிரார்த்தித்து அன்பர்கள்,
ஆதாரவாளர்கள், வாடிக்கையாளர்கள்,
நலன்விரும்பிகள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்களை
சமர்ப்பிக்கின்றோம்.

**சிறீ மாதவன்**

97, கஸ்த்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(00033)

புத்தாயிரம் ஆண்டில் காலடி எடுத்து
வைக்கும் இனிய காலைவேளையில்
எமது வாடிக்கையாளர்கள் அன்பர்கள்
ஆதரவாளர்கட்கு இதயம் கனிந்த
நல்வாழ்த்துக்கள்

**நியு சிற்றி காட்வெயர்ஸ்**

245, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(00037)

எமது வாடிக்கையாளர்கள் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவர்க்கும்
இனிய புத்தாண்டு வேளையில்
எமது வாழ்த்துக்கள்

**அன்பு அழகுச்சோலை**

48, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(00036)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் புத்தாயிரம் ஆண்டு சிறப்புச் செய்தி

# 'புத்தாயிரம் ஆண்டில் சிறந்த நற்குடும்பங்களே முன்மாதிரிகள்'

- அருட்பணி S. J. இராஜநாயகம் -

"அகவொளி"

'வார்த்தை மனுவுருவாகி நம்மிடையே குடி கொண்டார்' அரு1;4 இறைவன் மனிதன் ஆனார். இந்த 'மனிதன்' என்றசொல்இயேசுவைப் பொறுத்த மட்டில் அவர் 100%மனிதனாக இருந்தார். பாவம் தவிர அவர் அனைத்தும் இந்த உலகில் வாழும் எல்லா மனிதரைப் போலவே இருந்தார். துன்பம், மகிழ்ச்சி, வாழ்வின்ஏற்றத்தாழ்வுகளும் உணர்வுகள், உணர்வெழுப்பங்கள், நெருக்கீடுகள் என்பன இவரை விட்டுவைக்கவில்லை, இவர் எல்லாருக்கும் எல்லாமாக விளங்கினார்.

இயேசுவின் ஆளுமையை நோக்குமிடத்து இவர் 30 வயது தொடக்கம் 33 வயது மட்டும் இவரின் பகிரங்க வாழ்வில் தான் இவரைப் பற்றி நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது, இந்த 3 வருடகாலத்தில் இவரின் உரைகள், செயற்பாடுகள் மக்களை மிகவும் கவரக் கூடியதாகவும் மக்களுக்குச் சவால் விடக் கூடியதாகவும் அவர்கள் வியக்கக் கூடியவையாகவும் இருந்தன, 'அவர் வாயிலிருந்து வந்த அருள் மொழிகளைக் கேட்டு வியப்புற்று இவர்யோசேப்பின் மகன் அல்லவா?' லூக்கா 4:22. அவருடைய போதனைகளைக் குறித்து அவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள் லூக்கா 4:32 இயேசுவின் செயல்களைக் கண்ட யாவரும் மெய்மறந்து நின்றனர், லூக்கா5:26 அவருடைய சவால் பற்றி, ஓய்வு நாளில் நன்மை செய்வதா? தீமை செய்வதா? உயிரைக் காப்பதா அழிப்பதா? எதுமுறை?' என்று கேட்பார். இயேசுவின் ஆளுமையை அவரின் சிறப்பியல்புகளைக் கண்நோக்கிய ஒரு பெண் குரல் எழுப்பி 'உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறு பெற்றவர்' எனறு குரல் எழுப்பிக் கூறினார், லூக்கா 11:27. இவருடைய ஆளுமை நன்றாக விருத்தியடைந்து முதிர்ச்சி பெற்று எதையும் ஆய்ந்தறிந்து செயல்படுகின்றவராக விளங்கினார்.

இவையெல்லாம் இவருக்கு எப்படிக் கிடைத்தது? இது தான் மிக முக்கிய கேள்வி சிலர் சொல்லலாம், இயேசு முழு மனிதனாக இருப்பதால் அவருடைய ஆளுமை உருவாக்கமும் அவரது பெற்றோரால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. மரியாளும் யோசேப்பும் சிறந்த பெற்றாராக இருப்பதனால் அவர்களின் முன் மாதிரிகைகள் இளைஞன் இயேசுவில் பெரும் தாக்கத்தை செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கின்றது.

இயேசு தன்னுடைய பணி பற்றுக் கூறுகின்ற போது 'என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே எனது உணவு' என்றார், யோவின் 4:34 இயேசுவின்இந்த உணர்வு அதாவது பிதாவின் சித்தத்தை முதன்மைப்படுத்தி அதன்படி நடப்பது என்ற உணர்வை தன் பெற்றாரிடமிருந்து அவர்பெற்றிருக்கவேண்டும். ஏனென்றால்இயேசுவின்பெற்றார்இறைவனுடைய விருப்பத்தை முதன்மைப் படுத்தியே வாழ்ந்தவர்கள். 'நான் ஆண்டவருடைய அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்' (லூக்கா1:38) என்றார் மரியாள். 'யோசேப்பு தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ஆண்டவரின் தூதர் தமக்குப் பணித்தவாறே தம் மனைவியை ஏற்றுக் கொண்டார்' (மத்1:24) என்று யோசேப்புவைப்பற்றி நற் செய்தி எடுத்துரைக்கின்றது. இதன் மூலம் இயேசுவும் இத்தகைய அதாவது இறை சித்தத்தை முதன்மைப்படுத்தி எந்தவித சவால்கள் தடைகள் ஏற்பட்டாலும் பிதாவில் நம்பிக்கை வைத்து அவரது வேலைத் திட்டங்களுக்குத் தன்னை முழுமையாகக்கையளிப்பதை நாம் இயேசுவின் வாழ்விலே காணக் கூடியதாக இருக்கின்றது.

இயேசு குழந்தையாக இருக்கும் போது ஏரோது அரசன் அவரைக் கொல்லத் தேடிய போது அவர் தன் குடும்பத்தோடு இடம் பெயர்ந்து எகிப்திற்குச் செல்லவேண்டியிருந்தது. அன்னா புறொய்ட் குழந்தை உளரீதியல் பற்றிக் கூறுகின்றபோது "குண்டுத் தாக்குதலிலும் பார்க்க குழந்தைகள் இடம் பெயர்வில் மிகவும் பாதிப்புறுகின்றது. அதே நேரத்தில் குழந்தைகள் எப்போதும் தாயோடு ஒன்று சேர்ந்து வாழும். எப்படிப் பட்டவளாக இருந்தாலும் தாயோடு எப்போதும் ஒட்டி வாழும் தன்மையுடையது. இந்த இடம் பெயர்விலும் மரியாள் குழந்தை இயேசுவுக்கு ஒரு நல்லதொரு தாயாக வழிகாட்டியாக பாதுகாக்கின்றவளாக இருந்திருப்பாள். அது போன்று யோசேப்பும் இயேசுவின் உருவாக்கத்திலே தன்னுடைய பங்களிப்பைச் செய்திருக்கின்றார்.

யோசேப்புவை ஒரு "நீதிமானாக" நற் செய்தியாளர்கள் வர்ணிக்கின்றனர். இறை பக்தியும், இறையமும் எப்போதும் பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற ஆர்வமும், தீமைகளைக் களைந் தெறியும் திறனும் நீதிக்காக குரல் கொடுக்கும் ஆற்றலும் கட்டாயம் இயேசு தனது தந்தை தாயிடத்திலிருந்து பெற்றுக் கொண்ட பண்புகள் தான். தாய் தந்தையர்கள் கருத்துக்கள் எவ்வளவு நன்மைகளாக இருந்தாலும் அல்லது தீயவைகளாக இருந்தாலும் அதைத்

(4ஆம்பக்கம் பார்க்க)

வாடிக்கையாளர்களுக்கு
எமது மனங்கனிந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
ஜவுளி உலகில் தனிமுத்திரை பதித்தவர்கள்
விநாயகர் புடவை அகம்
62 A, நவீனசந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.
(00028)

வாடிக்கையாளர்களே!
மலரப் போகும் புத்தாயிரமாம் ஆண்டை
புதுச் சுவையுடன் வரவேற்க
அல்பா மிக்சர்
பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி, ஸ்ரான்லி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.
(00020) T.P. 021-2980

வாடிக்கையாளர்கள் அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்
60, வருட கால சேவையில்
அகலக் கால் பரப்பி நிற்கும்
சன்லையிற் றை கிளீனர்ஸ்
கிளைகள்:
சன்லையிற் கொமினிக்கேசன்
கச்சேரியடி. யாழ்ப்பாணம்.
சன்லையிற் மல்ரி சேர்வீஸ்
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி 2741
(00026)

பிறக்கும் இனிய புத்தாண்டில்
வாடிக்கையாளர்கள் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அபிமானிகள்
அனைவருக்கும்
எமது இதயம் நிறைந்த
நல்வாழ்த்துக்கள்!
பிடவைக்கடல்
சிமாட்டி
122, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்.
(00025)

வாடிக்கையாளர்களுக்கு!
புத்தாயிரமாம் ஆண்டின்
நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.
சிவாஸ் மணிக்கூட்டுத் தொழிலகம்
562, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(00027)

புலரும் புத்தாயிரம் ஆண்டில் எங்கள்
வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது
இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்
உள்நாட்டு வெளிநாட்டு நேரடித்
தொலைத் தொடர்புகளை நொடிப்
பொழுதில் பெற்றிட என்றும் நாடவும்
E.S.B. communication centre
தொலைத் தொடர்பு நிலையம்
444/2நாவலர் வீதி(பாப்பையாகடைச்சந்தி)
யாழ்ப்பாணம்
தொலைபேசி { உள்நாடு: 021- 3220
வெளிநாடு:009421 3220
குறைந்த கட்டணம் நிறைந்த சேவை
(00023)

புத்தாயிரம் ஆண்டில் அடி எடுத்துவைக்கும்!
எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.
இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்
50, 52, 54 கஸ்த்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
★ சகல விதமான சைக்கிள்கள் ★ உதிரிப்பாகங்கள் ★ றேடியோக்கள் ★ ரெலிவிஷன்கள் ★ மணிக்கூடுவகைகள்
மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொலைபேசி இல: 2988, 2368
()00024)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோஸ்யர் அனுஷியா வழங்கும் 2000 ஆண்டு உங்கள் யோகம் எப்படி அமையும்.

# மூன்றாவது உலகப்போர் நிகழும் ஆண்டு

# மக்கள் பேரிழப்புக்கள் உலகம்முழுவதும் நிகழும்

பிறக்கின்ற புத்தாண்டு கலியுகத்தின் ஆரம்ப நிகழ்வாக இருக்குமென்ற அச்சம் மேலை நாட்டு ஜோதிடர்கள் மத்தியில் உருவாகிவருகின்றன. இவ்வாண்டில் வருடக் கோள்களான சனிக்கிரகம், வியாழக்கிரகம், இராகு, கேது, நான்கும் வருட நடுப் பகுதியில் சமகாலத்தில் தாம் இருக்கும் இராசிகளில் இருந்து இடம் பெயர்கின்றன. மாதக் கோள்களும் வருடக் கோள்களும் வருட முற்பகுதியில் இராகு கேதுக்களால் அடைபட்டு காலசர்பநேயமடைந்து செயலிழக்கும் பாவம் அதிகமாகவுள்ளது. மேலும் இடபராசிகளில் ஒரே நேரத்தில் ஐந்துக்கதிகமான கிரகங்கள் சஞ்சரித்து கிரக யுத்தங்கள் ஏற்பட வாய்ப்புக்களுமுண்டு. இதனால் உலகம் முழுவதும் யுத்த மேகங்கள் சூழும், வல்லரசுகள் போட்டி அதிகமாகி மூன்றாம் உலகப் போர் அபாயம் உருவாக வாய்ப்புண்டு. கடந்த இரண்டு உலக மகா யுத்தங்களில் ஆயுதப் போராக இருந்த நிலை இம்முறை அணு ஆயுத யுத்தமாக மாறலாம். இதனால் மக்கள் அதிகமாக இறப்பை அடைவதுடன் பாரிய சேதங்கள் ஏற்படலாம். சில காலமே நடைபெறும் யுத்தம் உலகமே நடுகொடியில் நிற்பது போல் ஆகஸ்டு மாதத்துக்குப் பின்னர் சமாதானம் உருவாகும். இந்த யுத்தம் மதம் சார்ந்த மக்களை அடிப்படையாக இருக்கும். மதத்தலைவர்களே யுத்தத்தை சமாதானத்துக்கு கொண்டு வரமுயல்வர்.

இலங்கையைப் பொறுத்த வரையில், சனிபகவான் அவரோகண நிலையில் கடந்த பதினைந்து வருடங்களாக இருந்த நிலைமாறி ஆரோகண நிலைக்கு வருவதால் சமாதானத்தை நோக்கிய நகர்வாக நிலைமை மாற்றமடையும். யுத்த நிலைகள் ஏப்ரல், மே, யூன் மாதங்களில் பெரும் எடுப்புடன் முன்னெடுக்கப்பட்டாலும், இதனைத் தொடர்ந்த காலங்களில் யுத்த மேகங்கள் நீங்கி சமரச நிலை தென்படும். தமிழ் மக்களுக்கு ஆண்டின் நடுப்பகுதியின் பின் சுபிட்சமான காலமாகும். இலங்கை வளமான எதிர்காலத்தை நோக்கி செல்லும் போது நாமும் எம்மை வளம் படுத்த இந்த ஆண்டு வளம் சமைக்கும் என நம்பலாம்.

## மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை முதல் பாதத்தில் பிறந்தவர்களுக்கும் சு. சே. சோ. ல. லி. லு. லே. லோ. அ. என்ற எழுத்துக்களைத் தங்கள் பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுக்கும் இந்தப் பலன்கள் பொருந்தும் இராசிச்சக்கரத்தில் முதலாவது இராசி மேடம். இதனை அதிகமான உஸ்ணமான சர ராசி என்று அழைப்பர். இந்த இராசிக்கு அதிபதி செவ்வாய் மேட ராசியில் பிறந்தவர்கள் சிறந்த இலட்சியப் பற்றுள்ளவர்கள், சிற்றின்பப்பிரியர்கள் சுறுசுறுப்பானவர்கள், எதிலும் தீவிர சிந்தனையுள்ளவர்கள், பொறுமையற்றவர்கள் நினைத்ததை வெற்றிகரமாக, முடிப்பவர்கள், அடிக்கடி பிரயாணம் செய்பவர்கள். தவறு செய்பவர் எவராயிலும் அவர்களுடன் எடுத்த எடுப்பிலேயே சண்டைக்கு செல்பவர்கள், இவர்கள். எதிரிகளைப் பற்றி ஒரு போதும் கவலைப்படாதவர்கள், சற்றுமுன் கோபக்காரர், கோபம்கொண்டால் தணிந்து விடமாட்டார்கள், நிலைத்த புத்திக்காரர்கள், போர் முனையில் தனித்து நின்று போராடுபவர்கள், அலங்காரப் பிரியமும், இனக் கவர்ச்சியும், இனிமையாகப் பேசும் குணமும் உள்ளவர்கள் பிறர் மனதில் உள்ளவற்றைக் கிரகிப்பதில் சாமர்த்தியம் உள்ளவர்கள், எப்போதும் நகைச் சுவையாகப் பேசிச் சிரிக்க வைப்பதில் வல்லவர்கள், பெண்களாயின் நட்புக்காயிலும் காதலுக்காயிலும், கற்புக்காயிலும் உயிரைவிடுமளவிற்கு தன்மானம் உள்ளவர்கள், கணவர் மீது அதிக ஆசையுடையவர்கள். அதே வேளையில் கணவர் பிறபெண்களின் அழகில் கவரப்பட்டு இரசனையோடு பார்த்தாலும் தவறாகக்கருதி தகராறு செய்பவர்கள், வயதானாலும் தோற்றத்தில் வாலிபமாக தோன்றுபவர்கள்.

இந்த ராசிக்காரர்கள் தொழில் பங்காளர், மனைவி, கணவர் நண்பர்களாக அமைவதற்கு துலாம், தனுசு, மகரம் ஆகிய இராசியாளரைத் தேர்ந்தெடுப்பது அதிஸ்டம் தரும். இவர்களுடைய அதிஸ்ட தெய்வம் முருகன்; இராசியதிபதி செவ்வாய்; ஜய மந்திர எண்ணிக்கை 1008 அதிஷ்டரத்தினங்கள்-பவளம் (சிவப்புக்கல்) அதிஸ்ட எண்கள் 5, 4, 9 அதிஸ்டவாயில் தெற்கு.

இந்தாண்டு இந்த ராசிக்கு ராசியில் அமர்ந்திருக்கும் சனி பகவானும், குருபகவானும் யூன் மாதத்தில் இரண்டாம் வீட்டில் சஞ்சரிப்பார், ஏழரைச் சனியனின் கடைக்கூறு வியாழன் தான் இருக்கும் ஸ்தானத்தில் இருந்து சத்துரு ஸ்தானம், ஆயுள் ஸ்தானம், தொழில்ஸ்தானத்தை பார்ப்பது சுபிட்சம். இராகு கேதுக்களும் முறையே மூன்றாம் ஒன்பதாம் இடங்களுக்கு மாற்றம் பெறுகின்றன. கிரக நிலைகளைப் பொறுத்தவரையில் பிறக்கின்ற ஆண்டு நன்மைகளை அதிகமாக தோற்றுவிக்கும். தொழில் நிலைகளில் உற்சாகமும் அதிஸ்டவாய்ப்புக்களும் கிட்டும். எதிரிகள் தொல்லைகள் நீங்கி கடன்சுமைகள் கட்டுக்கடங்கி நிற்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும், திருமணமாகாதவர்களுக்கு அதற்கான யோகம் கிட்டும். குடும்பத்தில் நிலவிவந்த மனக்கசப்புக்கள் அகலுவதுடன் உறவுகள் பலமடையும், கல்வியில்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தாயிரம்...

தந்தை தாய்மார்கள் தம் பிள்ளைகளுக்குச் சொல்ல வேண்டியதில்லை அவைகளைப் பிள்ளைகள் தாமாகவே அறிந்து கொள்வார்கள். எப்படிப் பஞ்சு மிக எளிதில் தண்ணீரை வெகு லேசாக உறுஞ்சி தன்னகத்தே வைத்துக் கொள்வது போல பிள்ளைகளும் தங்கள் பெற்றாரின் நடையுடை பாவனைகள் அனைத்தையும் கிரகித்து தமதாக்கிக் கொள்வார்கள். இவற்றில் இருந்து தான் பிள்ளைகளின் செயல்பாடுகள் அமையப் போகின்றது. பிள்ளைகள் தங்களைப் பற்றிய சுய மதிப்பீடும் சமூகத்தில் அவர்கள் பிறருடன் பழகும் முறைகள் அவர்கள். தன்னகத்தே வைத்திருக்கும் மதிப்பீடுகள்அமைப்புகள்மீது பெற்றார் குழந்தை உறவிவதாம் கற்றுக் கொண்டலைகள் மிகவும்செல்வாக்கு செலுத்துவதைநாம்காணலாம்.

கணவன் மனைவி உறவில் தாம் எப்படி அன்புப் பரிமாற்றங்களை பரஸ்பரம் நடத்துகின்றார்களோ அதே அளவில்தான் தங்கள் பிள்ளைகளும் செயல்படப் போகின்றனர் கணவன் மனைவி ஒருவருக் கொருவர் அர்ப்பணிப்போடு வாழ்வதால் பிள்ளைகளும் அப்படி உருவாக்கப்படுகின்றனர். எனவே 2000ஆம் ஆண்டில் எமது குடும்பங்கள் யாவும் நல்ல குடும்பங்களாக மாற எமக்கு யேசு மரியாள் யோசேப்பு என்ற குடும்பம் எமக்கு மாதிரிகையாக தரப்பட்டிருக்கின்றது. இன்றைய கால கட்டத்தில் எமக்கு ஒரு சிறந்த சமுதாயம் தேவைப்படுகின்றது சமுதாயத்தின் ஒரு அலகு ஆக குடும்பம் இருப்பதனால் குடும்பங்கள் சரியாக, நல் மதிப்பீட்டோடும், நற் பண்புகளோடும் வாழ்வதனால் எம்மால் சிறந்த சமுதாயத்தை இப் புத்தாயிரமாம் ஆண்டில் அமைக்க முடியும்.

## வளமாய் வருக நிதம்

குலம் பெரிதாய் எண்ணாமல்
குண்டள்ளிப் போட்டு நிதம்
மலம் சொரியும் அரசு செயல்
மன தெண்ணிக் கேடென்று
நலம் புரியும் நோக்கோடு
நாட்டிலுலா வருவதென
வலம்புரியே திடங்கொண்டு
வளமாய் நீ வருக நிதம்.

- மகரன்

## அமைதி தர வருக!

போரொழிந்து பாரினிலே
பேரமைதி நிலவிடவும்
சீரோடுஞ் சிறப்போடும்
செந்தமிழர் வாழ்ந்திடவும்
திர்வதனைத் தந்தேநற்
சாதனையைச் செய்திடவே
இரண்டாயிரம் ஆண்டே நீ
இதயம் நிறைந்திட வருக!

நாயன்மார்கட்டு **ப. மகேந்திரதாசன்**

## வாழ்த்துக் கவிதை

தமிழ் என்னும் கடலில் முத்தாகிய வலம் புரியே
படித்தவர் கைகளில் வலம் வரும் வலம் புரியே.
எட்டுதிசை செய்திகளை திரட்டி வரும் வலம் புரியே.
சின்னஞ்சிறுவர் முதல் பெரியோர் வரை படிப்பது வலம் புரியே.
சுடசுடச் செய்திகளை சுத்த தமிழில் தருவது வலம்புரியே.
நீல வானத்தில் ஜொலிக்கும் நட்சத்திரம் போல் இருக்கும் வலம் புரியே.
தமிழன் குரலை உலகெங்கும் பறை சாற்றும் வலம் புரியே.
அறிஞன் கலைஞன் படித்து பாராட்டி வரும் வலம் புரியே.
பத்திரிகை உலகில் கொடி கட்டி பறக்கும் வலம் புரியே.
நீ பல்லாண்டுகாலம் சேவை செய்து வாழ்க வலம் புரியே.

**சொக்கலிங்கம்** திருவழகன் கட்டுடை

21 ஆம் நூற்றாண்டில்
காலடி எடுத்துவைக்கும்
எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகட்டும்
குகன் ஸ்ரோர்ஸ்
180, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(00025)

மலரும் புத்தாயிரம் ஆண்டில்
வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்,
அபிமானிகள் அனைவருக்கும்
எமது நல்வாழ்த்துக்கள்
அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு வேண்டிய
வடிவங்களில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
சிறி நதியா நகை மாடம்
2 G ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை 56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சிறி ரூபா நகை மாளிகை
131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(00022) தொலைபேசி: 021-2709

மலரும் புத்தாயிரம் ஆண்டில்
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கட்கு
எமது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!
ரவி அன் ராஜ சில்க்ஸ்
சகல விதமான ஜவுளித்தினுசுகளையும் மிகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
77, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(00021) T. P. 2469

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org